

# Voice of Jagadguru



advaitam paramanandam    an e-magazine on advaita

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## அருள் மொழிகள்

இந்த குரு சிஷ்யன் என்கிற சம்பிரதாயம் அனாதி காலமாக வந்திருக்கிறது. முதல் குரு பகவான் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி. அவர் நாராயணனுக்கு உபதேசம் செய்தார். அவர் பிரஹ்மாவிற்கு செய்தார். அவர் வசிஷ்டருக்கு செய்தார். அவர் சக்திக்கு செய்தார். அவர் பராசரருக்கு செய்தார். அவர் வேத வியாஸருக்கு.. என்றபடி ஒரு குரு சிஷ்ய பரம்பரை (இருந்து வந்தது) . இந்த பரம்பரையில் இருக்கின்ற விசேஷம் என்னவென்றால் சிஷ்யனுக்கு குருவின் விஷயத்திலே அசாதாரணமான பக்தியும், குருவிற்கு சிஷ்யன் விஷயத்திலே அசாதாரணமான அன்பும் இருக்கும். ஆதிசங்கர பகவத்பாதர் ஸாக்ஷாத் பரமசிவ அவதாரம் என்று எல்லோருக்கும் தெரியும். அவரும் கூட கோவிந்த பகவத்பாதர் சன்னிதியை அடைந்து அவரிடம் பயின்று வேதாந்த தத்வ ஞானத்தை அடைந்தார் என்கிறது சங்கர திக்விஜயம். சிலருக்கு ஒரு கேள்வி! "ஆதிசங்கரர் பகவான் பரமேஸ்வரரின் அவதாரம் என்கிறீர்களே, அவருக்கும் குருவிடம் போகவேண்டி இருந்ததா? அவர் தெரியாமல் போனாரா; தெரிந்தே போனாரா? அல்லது அவர் கோவிந்த பகவத்பாதரை பரீக்ஷிக்க போனாரா? அவர் கோவிந்த பகவத்பாதரை பரீக்ஷிப்பதற்காக போகவில்லை. ரொம்ப விநயத்துடன்தான் போனார். அப்போது, தெரியாமல் போனாரா, தெரிந்தே போனாரா என்று கேட்டால், "தெரியுமோ தெரியாதோ, குருவிடம் இருந்து வந்ததால்தான் அதற்கு ஒரு மதிப்பு! ராமர் வசிஷ்டரின் சன்னிதியில் தத்துவத்தை கிரஹித்துக் கொண்டார் என்று ராமாயணம் சொல்கிறது. ராமர் சாக்ஷாத் பரமாத்மாவின் அவதாரம் அல்லவா? அவருக்கு வஸிஷ்டர் சொல்ல வேண்டி இருந்ததா? கிருஷ்ண பரமாத்மா ஸந்தீபனி மஹரிஷியிடமிருந்து வித்தைகளை கிரஹித்துக் கொண்டார் என்று பாகவதம் சொல்கிறது. கிருஷ்ண



## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

பரமாத்மாவும் ஸந்தீபனி மஹரிஷியிடம் பாடம் கற்றுக் கொள்வதற்காக செல்ல வேண்டுமா என்று கேட்டால் அது ஒரு சம்பிரதாயம். குருவினால் உபதேசிக்கப்பட்ட ஞானம்தான் பிரயோஜனத்திற்கு வரும், ஸபலமாகும் என்று உபநிஷத் கூறுகிறது. குரு உபதேசம் இல்லாது வந்திருக்கக்கூடிய ஞானம் ஸபலமாகாது. "அங்கு என்ன வித்தியாசம்? குரு சொன்னால் என்ன? சொல்லாவிட்டால் என்ன?" என்று கேட்டால் வித்தியாசம் வெளியில் பார்ப்பதற்கு ஒன்றும் இருக்காது. உள்ளார்ந்த ஒரு வித்தியாசம் இருக்கும்.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

மனிதன் ஒரு விஷயத்தை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும் என்று பகவான் சொன்னார். “உன்னுடைய சிரேயஸ் உன்னால்தான் ஆக வேண்டும். வேறு யாரோ நம் சிரேயஸ்ஸிற்காக என்னவோ செய்யப் போகிறார் என்று நினைப்பது தவறு.”

உத்தரேதாத்மனாத்மானம் நாத்மானமவஸாதயேத் ।
ஆத்மைவ ஹ்யாத்மனோ பந்துராத்மைவ ரிபுராத்மன: ॥

உங்களுடைய சிரேயஸ் உங்களிடம் நான் இருக்கிறது. நீங்கள் சரியான மார்க்கத்திலே நடந்தால் உங்களுக்கு சிரேயஸ் உண்டாகும். நீங்கள் தப்பு வழியில் போனால் உங்களுக்குத்தான் அசிரேயஸ், யாரோ இன்னொருத்தன் எனக்கென்னவோ செய்கிறான் என்று நினைத்துக்கொள்ள வேண்டாம். உங்களுடைய ஸ்ரேயோ மார்க்கத்தை அனுசரித்தால் உங்களுக்கு நீங்கள் பந்து. நீங்கள் தப்பு வழியில் போனால் உங்களுக்கு நீங்கள்தான் சத்ரு. நமக்கு நாமே தான் பந்து. நமக்கு நாமே தான் சத்ரு. ஆனால், வெளியில் நிறைய சத்ருக்கள் இருக்கிறார்கள் என்று நாம் நினைக்கின்றோம். அபப்டி யாரும் கிடையாது. நம்முடைய சிரேயஸ்ஸிற்கு விரோதமான காரியங்களைப் பண்ணிக்கொண்டு இருந்தால் நாமே நமக்கு சத்ரு ஆகிவிடுவோம். ஆகையால் எல்லோரும் சிரேயோக்தமான காரியங்களை ஆச்ரயித்து தங்களுடைய ஜீவனத்தை பவித்ரமாக்கிக்கொள்ள வேண்டும்.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# விதுர நீதி

अभ्यावद्दति कक्ष्याणं विविध वाक्छुभाषिता ।
सैब दुर्भाषिता राजन् अनर्घायोपपद्यते ॥९४

அப்⁴யாவத்³த³தி கக்ஷ்யாணம்’ விவித⁴ வாக்சு²பா⁴ஷிதா .
ஸைப³ து³ர்பா⁴ஷிதா ராஜன் அனர்கா⁴யோபபத்³யதே ..94

அரசனே! பலவிதமான நல்ல சொற்களால் கூறப்படும் இனிய பேச்சு ஒருவருடைய புகழையும் மதிப்பையும் வளர்க்கிறது. அதே பேச்சு தீய சொற்களாகவும் கடுமையான வார்த்தைகளாகவும் மாறும்போது, அது ஒருவருக்கு அழிவையும் துன்பத்தையும் ஏற்படுத்துகிறது.

रोहते सायकैर्विद्धं वनं परशुना हतम् ।
वाचा दुरुक्तं बीभत्वं न संरोहति वाक्क्षतम् ॥ ९५

ரோஹதே ஸாயகைர்வித்³த⁴ம்’ வனம்’ பரஶுனா இதம் .
வாசா து³ருக்தம்’ பீ³ப⁴த்வம்’ ந ஸம்’ரோஹதி வாக்க்ஷதம் .. 95

அம்புகளால் துளைக்கப்பட்ட காடும், கோடாரியால் வெட்டப்பட்ட மரமும் காலப்போக்கில் மீண்டும் வளர்கின்றன. ஆனால் தீய வார்த்தைகளால் ஏற்படுத்தப்பட்ட காயம் மீண்டும் ஆறுவதில்லை; வார்த்தையால் ஏற்பட்ட மனக்காயம் எளிதில் நீங்காது.

कर्णिनाळीकनाराचान् निर्हरन्ति शरीरतः ।
वाक्शल्यस्तु ननिर्हर्तुं शक्योहृदिशयो हिलः ॥ ९६

கர்ணினாளீகனாராசான் நிர்ஹரந்தி ஶரீரத꞉ .
வாக்ஶத்யஸ்து நநிர்ஹர்தும்’ ஶக்யோஹ்ரு’தி³ஶயோ ஹில꞉ .. 96

கர்ணி, நாழிகம், நாராசம் போன்ற கூர்மையான அம்புகள் உடலில் பாய்ந்தாலும், அவற்றை உடலிலிருந்து வெளியே எடுக்க முடியும். ஆனால் வார்த்தையால் ஏற்பட்ட காயம் இதயத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டால், அதை வெளியேற்றுவது மிகவும் கடினம்.

यस्मै देवाः प्रयच्छन्ति पुरुषाय पराभवम् ।
बुद्धिं तस्यापकर्षन्ति सोऽवाचीनानि पश्यति ॥ ९७

யஸ்மை தே³வா꞉ ப்ரயச்ச²ந்தி புருஷாய பராப⁴வம் .
பு³த்³தி⁴ தஸ்யாபகர்ஷந்தி ஸோ(அ)வாசீனானி பஶ்யதி .. 97

எந்த மனிதனுக்கு தேவர்கள் தோல்வியையும் வீழ்ச்சியையும் ஏற்படுத்த விரும்புகிறார்களோ, அவருடைய புத்தியை அவர்கள் அகற்றிவிடுகின்றனர். அதனால் அவன் தாழ்வானதும் தீமையானதுமான செயல்களையே காண்கிறான்; நல்லது எது, தீமை எது என்பதைச் சரியாகப் பார்க்கவும் அறியவும் முடியாமல் போகிறான். (தொடரும்....)

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

**(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ மஹாஸந்நிதானம் ஶ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)**

## 13. பக்தியில் பல விதம்




அதற்கு குருநாதர், "முதலில் என்னை 'நான் யார்?' என்று விசாரித்துக் கொண்டிருக்கிறேன். பிறகு மற்றவர்களை விசாரிக்கலாம் " என்று பதில் கூறினாராம். எப்போதும் ஆத்ம விசாரத்திலேயே ஈடுபட்டு உள்ளவர்களிடம் இருந்து இப்படிப்பட்ட பதில்தான் கிடைக்கும். ஆகையால், நம்முடைய வாழ்க்கையின் இலட்சியத்தை நாம் முதலில் சிந்தித்து அதை அடைவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும்."

சாதாரணமான ஜனங்கள் பக்தி வழியையே எளிதானது என்று கருதுவார்கள். கர்ம மார்க்கத்தை அனுசரிக்கலாம் என்றால் அதற்கு எவ்வளவோ நியமங்கள் தேவை. அவ்வளவு நியமங்களையும் அனுசரிப்பதென்பது யாருக்கும் சாத்தியப்படாது. ஞான மார்க்கத்தை அனுசரிக்கலாம் என்றால் அதற்கும் சாதன சதுஷ்டயம் (விவேகம். வைராக்யம், சமதமாதிஷ்ட்க ஸம்பத்தி மற்றும் முமுக்ஷுதவம்) என்னும் நான்கு தகுதிகள் வேண்டும். இதையெல்லாம் பார்க்கும் போது, பக்தி மார்க்கமே மிகவும் சுலபம் என்று தெரியும். யுதிஷ்டிரர். "தர்மங்களிலேயே எந்த தர்மம் சிறந்தது?" என்று பீஷ்மரிடம் கேட்டார். அதற்கு பீஷ்மர்,

**ஏஷ மே ஸர்வதர்மாணாம் தர்மோதிகதமோ மத: |**
**யத்பக்த்யா புண்டரீகாக்ஷம் ஸ்தவைரர்சேன்னரஸ்ஸதா ||**

"பகவானை பக்தியுடன் வழிபடுவதே சிறந்த தர்மம்" என்றார். ஶ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் வரும் இந்த சுலோகத்திற்குப் பாஷ்யம் எழுதுகையில் ஶ்ரீ சங்கரர் சில கருத்துக்களைக் கூறியிருக்கிறார்.

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

கர்மாக்களை செய்வதற்கு பல நியமங்களை அனுசரித்தாக வேண்டும். ஆனால், பக்திக்கு நியமங்கள் கிடையாது. கர்மங்கள் செய்யப்படும்போது குறைகள் நேரிடலாம். சாஸ்திரத்தில் ஓரிடத்தில்.

**அவிதினா க்ருதம் அக்ருதம்**

என்று சொல்லப்பட்டதால், முறையின்றிச் செய்யப்பட்ட கர்மமானது செய்யப்படாதது போலாகிவிடும். பக்தி விஷயத்தில் இப்படி யெல்லாம் நேருவதற்கு அவகாசமேயில்லை. ஆகவே பக்தி மார்க்கம் தான் முக்தியடைய மிக எளிதான மார்க்கமாகும்.

நமது உடலிலுள்ள அவயவங்கள் எல்லாமே இறைவனை வழிபடுவதற்காகத்தான் இருக்கின்றன. ஆதிசங்கரர்,

**ஸா ரஸனா தே நயனே தாவேவ கரௌ ஸ ஏவ க்ருதக்ருத்ய:|**
**யா யே யௌ யோ பர்கம் வததீக்ஷேதே ஸதார்சத: ஸ்மரதி ||**

எனக் கூறியிருக்கிறார். நம்முடைய நாக்கு பகவானுடைய நாமங்களைச் சொன்னால்தான் அதற்கு பவித்ர தன்மையே வரும். வேறு விஷயங்கள் பேசுவதால் அது பவித்ரம் அடையாது. இறைவனுடைய திவ்ய மங்கள உருவத்தைக் கண்டால்தான் நம் கண்களுக்குப் புனிதம் ஏற்படும். மற்ற விஷயங்களைப் பார்ப்பதனால் அல்ல. நம்முடைய கைகள் பகவானைப் பூஜிப்பதற்காகத்தான் இருக்கின்றன. பகவானைப் பூஜை செய்யாத கைகளை "கைகள்" என்றே அழைக்க முடியாது. இதேபோல், நமது மனம் இறைவனது பாதாரவிந்தத்தையே எப்போதும் சிந்திக்க வேண்டும். இவ்வாறு ஒருவன் தன் எல்லா அவயவங்களையும் இறை வழிபாட்டிற்கே செலவிட்டானேயானால் அவன் தன்யன்.

இன்னொரு சுலோகத்தில் ஸ்ரீ சங்கரர்,

**நாராயண கருணாமய சரணம் கரவாணி தாவகௌ சரணௌ |**
**இதி ஷட்பதீ மதியே வதனஸரோஜே ஸதா வஸது ||**

என்று கூறினார். “ஓ நாராயணா, கருணை பொருந்தியவனே! நீயே எனக்கு எப்போதும் அடைக்கலம். எனது நா எப்போதும் இந்த ஆறு வார்த்தைகளை உச்சரித்துக் கொண்டிருக்கட்டும்."

தொடரும் .....)

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## என்றும் புதியவர்

### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

## 2. பேரறிவு (மஹாப்ரக்ஞை)

### மஹாப்ரக்ஞை - மொழிசார் அறிவாற்றல்

இந்த நிகழ்வில் ஆசார்யாளின் மொழிசார் அறிவாற்றல் தெளிவாக வெளிப்படுகிறது. தமது குரு “இதற்குப் பொருள் சொல்” என்று கூறிய பின், “ஸ்ரீனிவாஸர் சற்று யோசித்தார், ஒருவாறாகத் தமக்குத் தெரிந்தவற்றை மனதில் ஒன்று திரட்டிக் கூறலானார்” என்று இவ்வரலாறு கூறவில்லை. தாம் கற்றதை எடுத்துக் கூறும் ஆற்றல் ஆசார்யாளுக்குச் சிறு வயதிலேயே அமைந்திருந்தது என்பதை இது காட்டுகிறது. இதே போல் ஆசார்யாள் சிருங்கேரியில் பிரம்மசாரியாகக் கல்வி கற்கும் போது ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவ்வப்போது கேட்கும் கேள்விகளுக்குத் தமது விடைகளையும் விளக்கங்களையும் அளித்த விதம் பற்றி ஆசார்யாளின் ஆசிரியராக இருந்த ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள் விவரமாக எழுதியிருக்கிறார். அவற்றை “ஸ்ரீ குரு கிருபா விலாஸம்" என்ற நூலில் காணலாம். அந்நூலில் ஸ்ரீனிவாஸருடைய (ஆசார்யாள்) அறிவாற்றல் ஒரு சமயம் வெளிப்பட்டதைக் கூறி முடித்து பாஷ்ய ஸ்வாமிகள், “...மேதாவிலாஸத்துடன் இவ்விதமான பேச்சுத் திறமையும் பால்யம் முதற்கொண்டே தொடர்ந்து வந்ததை இந்த லேக்கர் பலமுறை அனுபவித்திருக்கிறார்" என்கிறார்.' (அடிக்கோட்டுக்குறி நம்முடையது) இதுவும் மொழிசார் அறிவாற்றலின் வெளிப்பாட்டையே காட்டுகிறது.




இது போல் இன்னொரு சம்பவம் ஒன்றும் ஆசார்யாளுக்குச் சிறு வயதில் அமைந்திருந்த மொழிசார் அறிவாற்றலைக் கோடிட்டுக் காட்டுகிறது. ஒரு நாள் மாலைப் பொழுதில் பரமாசார்யாள் சில சிஷ்யர்களுடன் சிருங்கேரியில் காலபைரவர் ஆலயத்தில் அமர்ந்திருந்தார். அச்சமயம் அங்கே ஒரு குரங்கு வந்தது. பரமாசார்யாள் அக்குரங்கிற்கு திராக்ஷைப் பழக் கொத்து ஒன்றைக் கொடுத்தார். குரங்கு அதைத் தின்னாமல், ஒவ்வொரு பழமாகப் பிய்த்து நசுக்கிக் கீழே எறிந்தது. இதைப் பார்த்த பாஷ்ய ஸ்வாமிகள், "குரங்கின் கையில் கொடுத்த பூமாலை போல் ஆகிவிட்டது” என்று கூறினார். உடனே ஸ்ரீனிவாஸர்

(ஆசார்யாள்) "ஆஞ்சனேய ஸ்வாமியிடம் கிடைத்த முத்து மாலை போல்" என்று திருத்தினார். ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் ஸ்ரீனிவாஸரிடம், "ஆஞ்சனேயருக்கும் முத்து மாலைக்கும் என்ன சம்பந்தம்? ஏதோ புதிர் போடுகிறாயே" என்று கூறவும், ஸ்ரீனிவாஸர் அதை விளக்கும் வகையில் ஒரு கதை கூறி முடித்தார். கதையைக் கேட்டவர்கள் அது சொல்லப்பட்ட விதத்தை மிகவும் ரசித்தனர் என்று பாஷ்ய ஸ்வாமிகள் கூறுகிறார்:

"... இந்தச் சிறு பையனுடைய வெகு அழகாகக் கதை சொல்லும் திறமையை ஸந்நிதானம் மனதிற்குள் புகழ்ந்துகொண்ட போதிலும் அதை வெளிக்காட்டாமல் 'சரி, இதை எதற்காகச் சொன்னாய்?' என்று கேட்கவே, அச்சிறுவன் சொல்லலுற்றான்: 'குரங்கின் கையில் கிடைத்த பூமாலை போல் என்று சாஸ்திரிகள் சொன்னதைக் கொஞ்சம் மாற்றிச் சொன்னேன்.' அவன் சொல்லும் அழகை நாங்கள் மெச்சாமல் இருக்க முடியவில்லை. ..." (அடிக்கோட்டுக் குறி நம்முடையது)

ஆசார்யாளின் சிறு வயதிலேயே மொழிசார் அறிவாற்றல் பிறர் வியக்கத்தக்க வகையில் இருந்தது இந்த நிகழ்வுகளிலிருந்து தெரிகிறது. இந்த அறிவாற்றல் பிற்காலத்தில் ஆசார்யாளிடத்தில் முழுமை அடைந்திருந்ததைக் குறிக்கும் வண்ணம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் தாம் இயற்றிய நாமாவளியில் ஆசார்யாளை "मधुरालापचतुरः" (இனிமையாகப் பேசுவதில் வல்லவர்) என்று போற்றியிருப்பதையும் இங்கே கருத்தில் கொள்ள வேண்டும்.

**மஹாப்ரக்ஞை-உடல்சார் இயக்கவின் அறிவாற்றல்**

அடுத்ததாக "உடல்சார் இயக்கவின் அறிவாற்றல்" என்பதைப் பற்றியும் இந்த அறிவாற்றல் ஆசார்யாளிடம் எப்படி அமைந்திருந்தது என்பதைப் பற்றியும் பேசுவோம். "உடல்சார் இயக்கவின் அறிவாற்றல்" என்று நாம் இங்கே கூறவுள்ளதை ஆங்கிலத்தில் "bodily kinesthetic intelligence" என்று கூறுகிறார்கள். இதில் "kinesthetic" என்ற சொல் இரண்டு வேறுபட்ட சொற்களின் கூட்டு; "kinetic" என்ற சொல் அதாவது "இயக்கம்"; "aesthetic" என்ற சொல் - "அழகுணர்ச்சி". இந்த இரண்டு சொற்களையும் சேர்த்து "kinesthetic" என்ற சொல் ஆக்கப்பட்டுள்ளது. தமிழில் இதற்கு நாம் "இயக்கவின்" ("இயக்கம்"+"கவின்") என்று பெயர் சூட்டுவோம். ஆசார்யாள் காட்டிய இயக்கவின் அறிவாற்றலைப் பற்றிப் பேசுவதற்கு முன்னுரையாக ஆசார்யாளின் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டவை ஒரிரண்டைப் பார்ப்போம். முதலாவதாக, ஹட யோகத்தில் உள்ள கடினமான ஆஸனம் ஒன்றை ஆசார்யாள் செய்து காட்டியது:

(தொடரும்.....) மிக்க நன்றி : Centre for Brahmavidya

## நீதி மஞ்ஜரீ

### ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்யாயம் 8
### தீவிர பக்தி

பின்ராத்திரி பூராவும் நர்த்தனம் செய்துவிட்டு இப்பொழுதுதான் அவர்கள் சிரமப் பரிஹாரத்திற்காக உள்ளே போயிருக்கிற ஸமயத்தில் இந்த வாத்தியக்காரன் வந்து வாசிக்க ஆரம்பித்தான். 'யஜமானரும் யஜமானியும் இப்பொழுதுதான் தூங்கப் போயிருக்கிறார்கள், சப்தம் போடாதே' என்று நான் சொல்லியும் அவன் கேட்காதபடியினால் பிடுங்கி வைத்தேன். அவன் என்னிடமிருந்து அதனை பிடுங்க வந்தபடியால் அவனையும் வெளியே தள்ளினேன். யஜமானர் யஜமானி இவர்களுடைய தூக்கத்திற்கு இடைஞ்சலாக இவன் சப்தமிடலாமா? நீங்கள்தான் சொல்லுங்கள்" என்று சொன்னான்.



இதைகேட்ட ஆலய உத்யோகஸ்தர் “அந்த பாதஸரத்தையும் சூடாமணியையும் என்ன செய்தாய்?" என்று மிக்க வியப்புடன் கேட்டார். உடனே சூரன் அவைகளை எடுத்து வந்து அவரிடம் கொடுத்தான். அவருக்குத் திடுக்கிட்டது. முந்தின நாள் இரவு, தானே எடுத்து கருவூலத்தில் வைத்துப் பூட்டின நகைகள் இவனிடம் எப்படி வந்தனவென்று திகைத்தார். உடனே ஆலயத்திற்குள் சென்று கருவூலத்தைத் திறந்து பார்க்கையில் அங்கே இந்த இரண்டு நகைகளையும் காணவில்லை. இங்குள்ள பாதஸரத்தை நன்கு பார்க்கையில் அதன் இடுக்குகளில் மணல் இருக்கக் கண்டார். சூடாமணியும் கொஞ்சம் உலைந்திருக்கக் கண்டார். இவன் சொன்னதெல்லாம் வாஸ்தவம்தான் என்று தெரிந்தவுடன் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் ராஸலீலையை நேரில் அனுபவிக்கும் பாக்கியம் பெற்ற மஹான் இவன் என்று உணர்ந்து கொண்டார். இவ்விஷயம் அதிவேகமாய் ஊர் பூராவும் பரவி இவனைக் கண்டு இவனுடைய பாததூளியை ஸேவிக்கவேண்டுமென்று ஏராளமாய் ஜனங்கள் கூடிவிட்டார்கள். அவர்கள் இவனை சிலாகித்து நமஸ்கரிக்க வருகையில் இவனுக்கு என்ன





## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

செய்வதென்று தெரியாமல் தான் முன் அனுபவித்த திவ்ய தர்சனத்தையே மனஸினால் எண்ணிப் பரவசனாய் நின்றுகொண்டு உயரப் பார்க்கையில் இவன் கண்ணுக்கு மாத்திரம் ஏதோ தென்பட்டது. இவன் உடனே இரு கைகளையும் சிரஸின்மேல் தூக்கிக்கொண்டு "கோவிந்தஜீ" என்று உரக்க சப்தமிட்டான். அங்குள்ளவர்களும் ஆகாசத்தை நிமிர்ந்து பார்த்தார்கள். அவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. உடனே அவர்கள் குனிந்து பார்க்கையில் சூரன் நின்றுகொண்டிருந்தவிடத்தில் அவனைக் காணவில்லை. பகவத் தர்சனம் ஏற்பட்ட பிற்பாடு அவனுக்கு தேஹபந்தமிருப்பது நியாயமில்லையென்று பகவானே அவனைத் தன்னுடன் ஐக்கியம் செய்துகொண்டு விட்டார் போலும்.

ஸர்வோத்தமராயிருப்பவரையே ஸேவிக்க வேண்டுமென்ற தீவிரமான ஸங்கல்பத்துடன் அவரையே நினைத்துக்கொண்டு பசி, தாஹம், நித்திரை எல்லாவற்றையும் பொருட்படுத்தாமல் அவரை எப்படியாவது ஸாக்ஷாத்கரிக்க வேண்டுமென்ற ஆவலுடன் மூன்று வருஷ காலம் கொஞ்சமேனும் மனதைத் தளரவிடாமல் ஏகாக்கிரசித்தனாயிருந்த இவனை யோகி என்று சொல்வதில் என்ன ஆக்ஷேபணை? இவன் ஜாதியில் கீழ்ப்பட்டவனாக இருக்கலாம். படிப்பு இல்லாமல் இருக்கலாம். படித்தவர்களின் பார்வையில் இவன் மூடனாகத் தோன்றலாம். இவனுடைய பிடிவாதத்தை மூடத்தனம் என்றும் நினைக்கலாம். எப்படியிருந்த போதிலும் இதுவும் பக்தியேயாகுமல்லவா? மூட பக்தியாகவேயிருக்கட்டுமே. அதனால் என்ன? பகவானுடைய அபாரமான கருணைக்குப் பாத்திரமாக முடியாதா? அவரே கீதையில்

**अनन्यचेताः सततं यो मां स्मरति नित्यशः ।**
**तस्याहं सुलभः पार्थ नित्ययुक्तस्य योगिनः ॥ 8 (14)**
அனன்யசேதா: ஸததம்’ யோ மாம்’ ஸ்மரதி நித்யஶ: .
தஸ்யாஹம்’ ஸுலப⁴: பார்த² நித்யயுக்தஸ்ய யோகி³ன: .. 8 (14)

என்று சொல்லியிருக்கிறபடி ஸுலபராகவிருப்பாரென்பதில் என்ன ஸந்தேஹம்?

(தொடரும் ...) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி

Our Mail ID : Info@voiceofjagadguru.com

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ||श्रीशारदास्तोत्रम्||

## श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

## ஶ்ரீஶாரதா³ஸ்தோத்ரம்

## (ஶ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

**(ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)**

चन्द्रः सौहार्दमिच्छंस्तव मुखशशिना प्राप्य वृद्धिं वलक्षे
पक्षे प्राप्येषदम्ब प्रहृषितहृदयश्चाभवत्पूर्णिमायाम्।
दृष्ट्वाऽथ त्वन्मुखेन्दुं मृगशिशुरहितं स्वं च चिह्नेन युक्तं
लज्जायुक्तस्ततोऽयं प्रतिदिवसमहो क्षीणतां याति कृष्णे ।। ८३

சந்த்³ர꞉ ஸௌஹார்த³மிச்ச²ம்’ஸ்தவ முக²ஶஶினா ப்ராப்ய வ்ரு’த்³தி⁴ம்’ வலக்ஷே
பக்ஷே ப்ராப்யேஷத³ம்ப³ ப்ரஹ்ரு’ஷிதஹ்ரு’த³யஶ்சாப⁴வத்பூர்ணிமாயாம்|
த்³ரு’ஷ்ட்வா(அ)த² த்வன்முகே²ந்து³ம்’ ம்ரு’க³ஶிஶுரஹிதம்’ ஸ்வம்’ ச சிஹ்னேன யுக்தம்’
லஜ்ஜாயுக்தஸ்ததோ(அ)யம்’ ப்ரதிதி³வஸமஹோ க்ஷீணதாம்’ யாதி க்ரு’ஷ்ணே ||83

சந்திரன் உன் முகமாகிய சந்திரனுடன் நட்பை விரும்பி சுக்லபக்ஷத்தில் சிறிது சிறிதாக வளர்ச்சிபெற்று, பூர்ணிமையன்று மகிழ்ச்சி நிறைந்தவனானான். உடன் மான்குட்டி இடம்பெறாத களங்கமற்ற உன் முகத்தை உற்றுநோக்கியவன் தன்னிடம் களங்கமுள்ளதை உணர்ந்து வெட்கித் தினந்தோறும் கிருஷ்ண பக்ஷத்தில் தேய்வடைகிறான். (83)

दृष्टं वाग्देवताया वदनसरसिजं येन भूमौ कदाचित्
शृङ्गाद्रौ तस्य वक्त्रात्सरसपद्युता वाक्ततिर्निः सरेद्धि।
नीहाराद्रेर्गुहातः सुरवरतटिनी यद्वदाश्वप्रयत्नात्
निर्गच्छत्येव तद्वन्न हि खलु विशयोऽस्माकमत्रास्ति कश्चित् ।। ८४

த்³ரு’ஷ்டம்’ வாக்³தே³வதாயா வத³னஸரஸிஜம்’ யேன பூ⁴மௌ கதா³சித்
ஶ்ரு’ங்கா³த்³ரௌ தஸ்ய வக்த்ராத்ஸரஸபத்³யுதா வாக்ததிர்னி꞉ ஸரேத்³தி⁴|
நீஹாராத்³ரேர்கு³ஹாத꞉ ஸுரவரதடினீ யத்³வதா³ஶ்வப்ரயத்னாத்
நிர்க³ச்ச²த்யேவ தத்³வன்ன ஹி க²லு விஶயோ(அ)ஸ்மாகமத்ராஸ்தி கஶ்சித் ||84

பூமியில் சிருங்ககிரியில் எப்போதாவது வாக்கின் தேவியான சாரதையின் தாமரை போன்ற சுவைமிக்க முகத்தைக்கண்டவனது முகத்திலிருந்து

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)



சொற்கட்டுடனுள்ள வாக்கு வரிசையாக வெளியாகும். பனிமலையின் குகையிலிருந்து முயற்சியின்றி கங்கை வெள்ளமாக வெளியாவது போன்றது இது. இதில் எமக்கு எந்த சந்தேகமுமில்லை.(84)

एकापि नानाविधरूपधर्चीत्येतादृशार्थस्य विबोधनाय ।
वेण्यां भुजङ्गी नयने कुरङ्गी मध्ये च सिंही प्रतिभासि किं त्वम् ।। ८५

ஏகாபி நானாவித⁴ரூபத⁴ர்சீத்யேதாத்³ரு’ஶார்த²ஸ்ய விபோ³த⁴னாய |
வேண்யாம்’ பு⁴ஜங்கீ³ நயனே குரங்கீ³ மத்⁴யே ச ஸிம்’ஹீ ப்ரதிபா⁴ஸி கிம்’ த்வம் ||85

ஒருவளே பல வகை உருவங்களை ஏற்பாள் என்பதன் பொருளை விளக்கவே, கூந்தல்பின்னலில் கருநாகமாக, கண்களில் பெண்மானாக, இடுப்பில் பெண்சிங்கமாகக் காட்சி தருகிறாயோ!(85).

कम्बौ पद्म भाति बिम्बं हि तस्मिन्मल्लीपङ्क्तिश्चापि नीलोत्पले द्वे।
सर्वं ह्येतद्भाति हैम्यां लतायां शैले चास्मिन्पश्यतैतद्विचित्रम् ।। ८६

கம்பௌ³ பத்³ம பா⁴தி பி³ம்ப³ம்’ ஹி தஸ்மின்மல்லீபங்க்திஶ்சாபி நீலோத்பலே த்³வே|
ஸர்வம்’ ஹ்யேதத்³பா⁴தி ஹைம்யாம்’ லதாயாம்’ ஶைலே சாஸ்மின்பஶ்யதைதத்³விசித்ரம் || 86

சங்கின் மீது ஒரு தாமரை, அதில் கோவைப்பழம், மல்லிகை வரிசை, அதன்மேல் இரு நீலோத் பலங்கள், இவை அனைத்தும் இந்த மலையிலுள்ள தங்கக் கொடியில் தெரிகின்றன. இது வியப்பிற்குரியதல்லவா. (கழுத்து, முகம், உதடு, பற்கள், கண்கள், மேனி இவை இவ்வாறு புலப்படுகின்றன)

(தொடரும் ...)

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயணம்

## பாலகாண்டம்

### ஐந்தாவது ஸர்கம்

**மாரீசனையும் சுபாகுவையும் வீழ்த்துதல்; அகல்யை சாப விமோசனம்**

நான்காம் நாள், விசுவாமித்திரர் ராமனைப் பார்த்து, 'ராமா, விதேக ராஜ்யத்தின் தலைநகரில் மகாத்மா ஜனகர் நடத்திக் கொண்டிருக்கும் பெரும் வேள்வியைக் காண நாம் செல்லப் போகிறோம். அங்கே, பிநாகதாரி பரமேஸ்வரனால் அளிக்கப்பட்ட வில் ஒன்று இருக்கிறது. வலிமை மிகுந்த அந்த வில்லை நீ பார்க்கப் போகிறாய், ஜனகன் உன்னைப் போற்றிக் கௌரவிப்பான்' என்று தெரிவித்து விட்டு, முனிவர்களோடும் கங்கையின் அருகில் அமைந்திருந்த கௌதம முனிவரின் புண்ணிய ஆசிரமத்தை அடைந்தார்.

தேவலோக மரங்களிலிருந்து மலர்களும் பழங்களும் கொட்டிக் கிடந்த அந்த இடத்தில் அகல்யை தவம் செய்து கொண்டிருந்தாள். விலங்குகளும் பறவைக் கூட்டங்களும் இல்லாமல், எல்லா உயிர்ப் பிராணிகளாலும் கைவிடப்பட்டதுமான அந்த இடத்தைப் பார்த்ததும், தாமரைக் கண்ணரும் திருவளர்செல்வருமான ராமன், முனிவரை நோக்கிக் கேட்டார்

'இலை, மலர், பழங்கள் நிறைந்து சிறப்பாக ஒளி வீசிக் கொண்டிருப்பதும், (ஆனால்,) உயிரினங்களால் நிராகரிக்கப்பட்டதுமான இந்த ஆசிரமம் யாருடையது? உத்தமரே, இந்த இடம் என் மனத்துக்குக் குதூகலம் அளிக்கிறது. (எனவே, இந்த ஆசிரமத்தைப் பற்றி) விரிவாகச் சொல்லுங்கள்.'

விசுவாமித்திரர் சொன்னது: 'ராமா, இந்த ஆசிரமத்தின் முந்தைய வரலாற்றைக் கேள். தர்மங்களை அனுஷ்டிப்பதில் முதன்மையானவரும் உலகப் புகழ் பெற்றவருமான கௌதம முனிவர், பகவான் ஸ்ரீஹரியைக் குறித்துத் தவம் செய்து வந்தார். அவருடைய பிரும்மசர்ய விரதத்தினால் மகிழ்ச்சியடைந்த பிரும்மதேவன், பேரழகு வாய்ந்தவளும் மகான்களுக்குச் சேவை செய்வதில் மனம் கொண்டவளுமான அகல்யை என்ற கன்னிகையை (பத்தினியாக)க் கொடுத்தார்.

தவச் செல்வரான கௌதமர். அவளுடன் இங்கே வசித்து வந்தார். (அகல்யையின் அழகில் மதிமயங்கிய) இந்திரன் அவளுடன் கூடி மகிழ்வதற்கான வாய்ப்பை எப்போதும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு சமயம், கௌதமர் வீட்டிலிருந்து வெளியே சென்றதும், அவரைப் போலவே

தோற்றம் கொண்டு, (உள்ளே வந்து, அகல்யையுடன்) கூடிக் களித்து விட்டு வேகமாக வெளியேறும் வேளையில் முனிவர் திரும்பி வந்து விட்டார்.




தன்னைப் போலவேயான உருவத்துடன் செல்லும் அவனைப் பார்த்து மிகவும் கோபம் கொண்ட முனிவர் கேட்டார் : 'யாரடா நீ? அற்பப் பதரே! என் உருவத்தைப் போட்டுக் கொண்டிருக்கும் கடையவனே! 'உண்மையைச் சொல்லிவிடு. இல்லையென்றால் உன்னைப் பொசுக்கிச் சாம்பலாக்கி விடுவேன். ஆமாம்.' அதற்கு அவன், 'நான், தேவராஜன், காமத்துக்கு அடிமையாகி விட்டேன். என்னைக் காப்பாற்றுங்கள். கீழ்த்தரமான எண்ணம் கொண்ட நான், வெறுக்கத் தக்க செயலைச் செய்துவிட்டேன்' என்றான். கௌதமர். சினத்தால் கண்கள் சிவக்க, வானுலகத்துத் தலைவனைச் சபித்தார்.

'கொடுங்கோலனே! பாலுணர்வுப் பித்தனே! உன் உடலில் ஆயிரககணக்கான ஆண்குறிகள் உண்டாவதாகுக.' இவ்வாறு, தேவராஜன் இந்தினைச் சபித்துவிட்டு, விரைவாகத் தன் ஆசிரமத்துக்குள் நுழைந்த கௌதமா, கைகூப்பிய வண்ணம் நடுங்கிக் கொண்டிருக்கும் அகலயையைப் பார்த்து, 'கேடுகெட்டவளே! நடத்தை தவறியவளே! என் ஆசிரமத்துப் பாறாங்கல்லில் உன் வாழ்க்கையைக் கழிப்பாயாக. உணவு இல்லாமல், வெயில்-காற்று-மழையைப் பொறுத்துக் கொண்டு, இதயத்தில் விளங்குகின்ற பெருந்தெய்வமான ராமனை, மன ஒருமைப்பாட்டுடன் இரவு-பகலாகத் தியானித்துக் கடுமையாகத் தவம் செய்து கொண்டிரு. என்னுடைய இந்த ஆசிரமம் உயிரினம் ஏதும் இல்லாமற் போகக் கடவது.

இவ்விதமாக, ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கழிந்த பின்னர், தசரத குமாரனும் திருவளர்செல்வனுமான ராமன், தன் தம்பியுடன் வருவார். நீ தங்குவதற்கு இடம் தந்துள்ள கல்லின் மீது அவர் தம் திருவடிகளை வைத்ததும், நீ பாவம் நீங்கப் பெறுவாய். பக்தியோடு ராமனைப் பூஜித்து வலம் வந்து, நமஸ்காரம் செய்து, தோத்தரித்து, சாபத்திலிருந்து முற்றிலுமாக விடுதலை பெறுவாய். பின், முன்னைப் போலவே எனக்கு உகந்த முறையில் சேவை

செய்யத் தொடங்குவாய். கௌதமர் இவ்வாறு கூறிவிட்டு, மிகச் சிறந்ததான இமயமலைக்கு (தவம் செய்வதற்காகச்) சென்று விட்டார்.

(தொடரும்…)

Our Website link : https://www.voiceofjagadguru.com/
Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com

| Editorial Board | | |
|---|---|---|
| Sri P A Murali | Hon' Advisor | Administrator & CEO, Sri Sringeri Mutt & It's Properties, Sringeri |
| Sri S N Krishnamurthy | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| Sri Tangirala Shiva Kumara Sharma | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| PujyaSri Swami Guruparananda | Hon' Editor | Founder Acharya, Poornalaya & Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Theni. |
| Sri B Vijay Anand | Web Director | Coimbatore |
| Smt B Srimathi Veeramani | Web Asst Director & Chief Editor | Tirunelveli |
| K M Kasiviswanathan | Hon' Editor | Tirunelveli |